# JUICE – 2026

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கின் ஒரு பகுதியாக

---

# ஏழாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு – 2026

### காலம்: 2026 கார்த்திகை 05, 06

### கருப்பொருள்:

## சமூக விமர்சனக் கருவியாக இலக்கியம்: இருபத்தோராம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் இலக்கியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் 'கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின்' அனுசரணையில் அனைத்துலகத் தமிழியல் ஆய்வுமாநாட்டினை நடாத்தி வருகின்றது. அதனுடைய தொடர்ச்சியாக நடப்பாண்டில் ஏழாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டினை, **"சமூக விமர்சனக் கருவியாக இலக்கியம்: இருபத்தோராம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் இலக்கியம்"** என்ற கருப்பொருளில் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு நீண்ட பாரம்பரியத்தினைக் கொண்டது. குறிப்பாக யாழ்ப்பாண மன்னர் காலம் முதலாக தொடர்ச்சியான இலக்கியப் பாரப்பரியம் அதற்குண்டு. இருபத்தோராம் நூற்றாண்டுக்கு முன்னதாக ஈழத்திலக்கியங்கள் குறித்ததான ஆய்வுகள் நிகழ்ந்துள்ள போதிலும் இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கிய முயற்சிகள் குறித்த ஆய்வுகள் இதுவரை பெரிதாக மேற்கொள்ளப்படவில்லை. இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு காலம் கடந்துள்ள நிலையில் அக்காலப்பகுதியில் ஈழத்தில் நிகழ்ந்த ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகளை ஆய்வு செய்யவேண்டிய சமூகக்கடமை தமிழ்த்துறைக்கு உரியது. ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் வாழ்வியலை, சிந்தனைகளை, கருத்தியல்களை இருபத்தோராம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகள் தம் படைப்புக்களில் தீவிரமாக சமூகவியல்

விமர்சனக் கண்ணோட்டத்தில் வெளிக்கொணந்துள்ளனர். இதன் அடிப்படையிலேயே ஏழாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டினை மேற்படி கருப்பொருளில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். உலகளாவிய நிலையில் பரந்து வாழும் தமிழறிஞர்கள் பலரும் இந்த ஆய்வு மாநாட்டில் பங்கெடுத்துப் பயன்விளைவிப்பார் என நாம் பெரிதும் நம்புகின்றோம். இந்த மாநாட்டினை இரண்டு நாட்கள் நடாத்துவதென்று திட்டமிட்டுள்ளோம். முதல் நாள் தொடக்க நிகழ்வுகள், கௌரவிப்புகள், கலைநிகழ்வுகள், ஆய்வரங்க அமர்வுகள் இடம்பெறும். இரண்டாம் நாள் கலைநிகழ்வுகள் நடைபெறும். மேலும் இந்த ஆய்வுமாநாட்டையொட்டிய போட்டி நிகழ்வுகளாக, வடக்கு மாகாணப் பாடசாலை உயர்தர மாணவர்களுக்கிடையே மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் மற்றும் சேர் பொன் இராமநாதன் கட்புல மற்றும் ஆற்றுகைகள் பீட மாணவர்களுக்கிடையே தமிழறிவுப்போட்டிப் பரீட்சையினையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்.

**ஆய்வுத்தடங்கள்**

1. இலக்கியமும் வரலாறும்
2. இலக்கியமும் சமூகமும்
3. இலக்கியமும் இனவரைவியலும்
4. இலக்கியமும் பண்பாடும்
5. இலக்கியமும் மொழியியலும்
6. இலக்கியமும் சூழலியலும்
7. இலக்கியமும் வாழ்க்கையும்
8. இலக்கியமும் உளவியலும்
9. இலக்கியமும் அடையாளமும்
10. இலக்கியமும் ஆற்றுப்படுத்தலும்
11. இலக்கியமும் கல்வியியலும்
12. இலக்கியமும் தத்துவமும்
13. இலக்கியமும் சமயமும்
14. இலக்கியமும் கலையும்
15. இலக்கியமும் திறனாய்வும்
16. இலக்கியமும் இசையும்
17. இலக்கியமும் நாட்டாரியலும்
18. இலக்கியமும் சித்தமருத்துவமும்
19. இலக்கியமும் போரும்
20. இலக்கியமும் சமூக நல்லிணக்கமும்
21. இலக்கியமும் மொழிபெயர்ப்பும்

**கட்டுரை அமையவேண்டிய முறை:**

ஆய்வுக்கட்டுரை சொந்த முயற்சியாக இருப்பதுடன் இதற்கு முன்னர் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| மொழிமூலம் | : | தமிழ் |
| எழுத்துரு | : | கணினி அச்சில் பாமினி எழுத்துருவில் அமைய வேண்டும். |
| | | (Bamini எழுத்துருவில் word மற்றும் Pdf கோப்புருவில்) |

**எழுத்துக்களின் அளவு:**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | 14 |
| ஆய்வுச்சுருக்கம் | : | 10 |
| கட்டுரை | : | 12 |
| வரிகளின் இடைவெளி | : | 1.5 |
| தாள் | : | A4 |
| பக்க அளவு | : | 10 பக்கங்களுக்கு மேற்படாமல். |

**கட்டுரையின் அமைப்பு:**

தலைப்பு

ஆசிரியர்(கள்) பெயர்

பதவிநிலை

முகவரி

தொலைபேசி இலக்கம்

மின்னஞ்சல் முகவரி

100 சொற்களுக்கு மேற்படாத ஆய்வுச்சுருக்கம், திறவுச்சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக முழுமையான ஆய்வுக்கட்டுரை அமையவேண்டும்.

அடிக்குறிப்பு, உசாத்துணை 'ஹாவாட்' (HAVARD) முறையில் அமைதல் வேண்டும்

**அனுப்பவேண்டிய முகவரி:**

மின்னஞ்சல் : ict2023tamil@gmail.com

தபாலில் : பேராசிரியர். (செல்வி). செ. சிவசுப்பிரமணியம்
தலைவர், தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**கட்டுரை அனுப்புவதற்கான கால எல்லை:**

ஆய்வாளர் **ஆய்வுச் சுருக்கத்துடன் கூடிய முழுமையான ஆய்வுக்கட்டுரை**யை ict2023tamil@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு 2026 ஆவணி 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு : 20 ஆவணி 2026

பதிவுக்காலம் : 05 புரட்டாதி 2026

**பதிவுக்கட்டணம்:**

| | | |
|---|---|---|
| உள்ளூர் ஆய்வாளர்கள் | : | 4000.00 |
| பட்டப்படிப்பை மேற்கொள்ளும் உள்நாட்டு மாணவர்கள் | : | 1000.00 |
| வெளிநாட்டு ஆய்வாளர்கள் | : | 50 அமெரிக்க டொலர். |

**கட்டணம் செலுத்தும் முறை:**

நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயரிற்கு மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளையின் 040002282101060 என்னும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்யவும்.

இலங்கைக்கு வெளியே இருந்து அனுப்பப்படும் கட்டணங்களுக்கு Swift Code: ‘PSBKLKLX’ என்பதைப் பயன்படுத்தவும்.

| | |
|---|---|
| Bank Name: | People's Bank, Sri Lanka |
| Branch Code: | 162 |
| Swift Code: | PSBKLKLX |
| Bank Account Name: | University of Jaffna |
| Bank Account Number: | 040002282101060 |
| Reference No: | 040002282101060 |

வங்கியில் பணஞ்செலுத்திய பற்றுச்சீட்டின் நகலை ict2023tamil@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கும், மூலப்பிரதியை தலைவர், தமிழ்த்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை என்னும் முகவரிக்கும் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

பேராசிரியர். (செல்வி). செ. சிவசுப்பிரமணியம்
தலைவர், தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.